DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -24

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. பட்டு | Caste: |
| Husband Name: | திரு. முருகப்பன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 22nd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A13 to A18 present. A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**22.01.2024.**

**முதல் விசாரணை**

நான் வங்குடியில் மேலத்தெருவில் வசித்து வருகிறேன். இறந்துபோன காசிநாதன், மகாலிங்கம், தர்மலிங்கம், சுரேஷ், பிரபு ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். ( சாட்சி எதிரிகளை அவர்களது அருகில் சென்று பார்த்துவிட்டு பதில் சொல்லுகிறார்).

காசிநாதன், மகாலிங்கம், தர்மலிங்கம், சுரேஷ், பிரபு ஆகியோர் இறந்து 17 ஆண்டுகளாகிறது. அவர்கள் இறந்துபோன தினத்தன்று எனது மருமகளுக்கு பிரசவம் ஆகியிருந்த காரணத்தினால் நான் அவருக்கு துணையாக வெட்டியார்வெட்டு என்ற ஊரிலுள்ள அரசு மருத்துவமனையில் இருந்தேன். குழந்தை பிறந்து 7 நாட்கள் கழித்து தான் நான் ஊருக்கு திரும்பினேன். ஊருக்கு வந்த நான் ஊரிலிருந்த போலிசார்

சொல்லி ஊரில் 5 கொலைகள் நடந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் பயந்துகொண்டு கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள எனது சின்னம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் ஊருக்கு திரும்பி சென்ற அன்று போலிசார் என்னை விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும், அந்த விசாரணையின் போது நான் சம்பவ தினத்தன்று காலை 6.00 மணியளவில் களைவெட்டுவதற்காக வயலுக்கு சென்றதாகவும், அன்றைய தினம் 11.00 மணியளவில் நான் களை வெட்டிகொண்டிருந்தபோது அந்த வழியாக சென்றவர்கள் என்னிடம் எனது ஊரில் கொலை நடந்துவிட்டதாக சொன்னார்கள் என்றும், ஊருக்கு ஓடிவந்து பார்த்தபோது பூராசாமி பெட்டிகடைக்கு மேல்புறம் காசிநாதன் வெட்டப்பட்டு இறந்துகிடந்ததாகவும், பெட்டிக்கடைக்கு எதிர்புறம் தர்மலிங்கம் வெட்டப்பட்டு தலையில்லாமல் முண்டமாக கிடந்தார் என்றும், காமராஜ் வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் இடையில் மகாலிங்கம் வெட்டப்பட்டு இறந்துகிடந்ததாகவும், பாலுசாமி வீட்டின் அருகில் பிரபு என்பவர் வெட்டப்பட்டு தலையில்லாமல் முண்டமாக கிடந்ததாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் போலிசார் விசாரணையில் ரவிசந்திரன் பிரிவினருக்கும், காசிநாதன் பிரிவினருக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக சென்றவருடம் காசிநாதன் குடும்பத்தினரால் தேசிங்குபாலன் கொலைசெய்யப்பட்ட காரணத்தினால், காசிநாதன் குடும்பத்தை பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், பழனிசாமி, பிரபாகரன், ராஜதுரை, தினேஷ், ரமேஷ், பாஸ்கரன், திருவனப்புத்துாரன் ரமேஷ், சிலம்பரசன், சசிகலா, கனகவள்ளி, காளிதாஸ், ஸ்ரீதர், விஜய், ஜவகர்பாபு, சுரேஷ் ஆகியோர் அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் பாலுசாமி வீட்டின் பின்புறம் மறைந்திருந்ததாகவும், எதிரிகள் சசிகலா, கனகவள்ளி ஆகியோர்

காசிநாதனின் மகன்கள் குளித்துவிட்டு வருவதாக தகவல் சொன்னதன்பேரில் எதிரிகள் ரவிசந்திரனும், திருஞானமும் சுரேசை வெட்டியதாகவும், எதிரிகள் பழனிசாமியும், பிரபாகரனும் பிரபுவை வெட்டியதாகவும், எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை வெட்டியதாகவும், எதிரிகள் ரமேசும், பாஸ்கரனும் தர்மலிங்கத்தை வெட்டியதாகவும், எதிரிகள் திருவனப்புத்துாரான் ரமேசும், சிலம்பரசனும் காசிநாதனை வெட்டியதாகவும், சாட்சி ஜானகியை சிலம்பரசன் வெட்டியதாகவும், எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை காளியம்மன் கோவிலின் பின்புறம் கொண்டுபோய் வைத்ததாகவும், எதிரி சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை காளியம்மன் கோவில் சூலத்தில் குத்தியதாகவும் நான் கேள்விபட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

காசிநாதனின் குடும்பத்தினர் தேசிங்குபாலனை கொலை செய்த காரணத்திற்காக பழிக்குபழி வாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எதிரிகள் செயல்பட்டிருப்பதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்த்த மற்றும் கேள்விபட்ட உண்மை சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மருமகளுக்கு பிரசவம் முடிந்ததிற்கு பின்னிட்டு நான் ஊருக்கு சென்றவுடன் போலிசார் என்னிடம் ஊரைவிட்டு வெளியே சென்றுவிடும்படி சொன்னதன் காரணத்தினால் நான் வெளியூருக்கு போய்விட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.